1975 மார்ச் 6]

மாண்புமிகு திரு ஒ. பி. இராமன் : தலைவரவர்களே, இந்த மூன்று ஜாதி மரங்கள் எத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் வெட்டப்படுகின்றன என்பது குறித்து விடை. இந்த மரங்களை வெட்டி கொம்புகளாகப் பயன்படுத்துவதற்காக என்றால், 20 ஆண்டுக்காலம், தடி மரங்களாக வெட்டி பலகைகளாக அறுக்கும் அளவுக்கு 80 ஆண்டுக்காலம் என்று இருக்கின்றது. 80 ஆண்டுகளுக்குப் பிறகும் வெட்டி பயன்படுத்தா விட்டால், வீணாகிவிடும். முதிர்ந்த மரங்கள் வெட்டப்படுகின்றன என் கிறார்கள். காடு வளர்க்க வேண்டும் என்பது நல்ல யோசனைதான்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. கவன ஈர்ப்பு.

(1) அரசு "ஏ" பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கும், புதுக்கோட்டையில் "ஏ" பிரிவு உயர் நிலைப் பள்ளிகளில் முதல் நிலைத் தமிழாசிரியர்களுக்கும் பி. டி. ஆசிரியர் ஊதியம் தரப்படாதது குறித்து.

THIRU G. SWAMINATHAN: Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the non-payment of B.T. scale of pay to Second Grade Tamil Pandits who are working in 'A' Wing High Schools of the Government contrary to G.O. Ms. No. 63, dated 17th January 1974 and also in the case of some of the First Grade Tamil Pandits working in 'A' Wing High Schools in Pudukottai Town, lowering of their B.T. scale of pay to that of Secondary Grade contrary to the above mentioned G.O.and the fact of not allowing B.T. scale of pay to only those Tamil Pandits who are working in the 'A' Wing School while the same scale has already been paid to those in the 'B' Wing and Aided Secondary Schools in the State.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அரசு "அ" பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள முதல்நிலை தமிழாசிரியர் பதவிகளில் நியமனம் அல்லது பதவி உயர்வு பள்ளிக் கல்வி இணை இயக்குனரால் செய்யப்படுகிறது. அரசு "பி"பிரிவு பள்ளிகளில் அதே தரத்தில் உள்ள பதவிகளில் நியமனம் அல்லது பதவி உயர்வு முதன்மைக் கல்வி அலுவலர்களால் செய்யப்படுகிறது. "அ" பிரிவு பள்ளிகளைப் பொறுத் தவரையில் முதல்நிலைத் தமிழாசிரியர் எவரும் இரண்டாம் நிலைக்குத் தரம் தாழ்த்தப்படவில்லை. மாறாக புதுக்கோட்டை இராணி அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் அரசு ஆணை எண். 63, கல்வி, 1974-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ம் தேதியின்படி இரண்டு இரண்டாம்

நிலை தமிழாசிரியர்கள் முதல் நிலைக்கு பதவி உயர்வு தரப்பட்டுள்ளார்கள். தற்காலிகமாக இரண்டாம் நிலை தமிழாசிரியர்களாக நியமனம் செய்யப் பட்டவர்களையும் மற்றும் இரண்டாம் நிலையில் தகுதி காண் பருவம் முடிக்கப் பெறாதவர்களையும் முதல்நிலை பதவியில் அமர்த்துவது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநர் சில விளக்கங்களை அரசிடம் கோரியிருந்தார். இது அரசின் ஆய்வில் உள்ளது. விரைவில் விளக்கங்கள் அனுப்பப்படும். மதுரை தமிழ்ச் சங்கம் வழங்கும் புலவர், பண்டிதம் சான்றிதழ் பெற்றவர்களை முதல் நிலை பதவியில் அமர்த்துவது குறித்தும் சில விளக்கங்களை இயக்குநர் கோரியிருந்தார். அதற்கான விளக்கங்கள் அண்மையில் தரப் பட்டுள்ளன. அரசு "பி" பிரிவு பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஒரு 6 நபர்கள் தவிர மற்றெல்லோருக்கும் முதல் நிலை பதவிகள் அளிக்கப்பட்டு விட்டன. இந்த ஆறு பேர்களின் பணிப் பதிவேடுகள் கிடைக்கவில்லை என்றும் அவை கிடைக்கப்பட்டதும் அவர்களது பதவி உயர்வும் கவனிக்கப் படும் எனவும் தெரியவருகிறது.

(பிற்பகல் 4-30)

திரு ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, புதுக்கோட்டை உயர்நிலைப் பள்ளியினுடைய ஆசிரியர்களுக்கு முதல் நிலை தமிழ் ஆசிரியர்களுடைய ஊதியம் கொடுக்கப்பட்டு, பின்னர் அவர்கள் இரண்டாம் நிலைக்கு மாற்றப் பட்டு, அவர்களுடைய சம்பளமும் பிடிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இந்த "கால் அட்டென்ஷன்" கொடுத்த பிறகுதான் கவன ஈர்ப்பு கொடுத்த பிறகுதான் அவர்களுக்கு முதல் நிலைக்குரிய சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதனுடைய நிலைமைகள் தெரியவில்லை. ஆனால் இரண்டு இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்கள் பதவி உயர்வு தரப்பட்டிருக்கிறார்கள். அது இன்றைய நிலைமை.

(2) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும், பணியாற்றும் ஆசிரியர்களுக்கு "சரண்டர் லீவ்", 18 மாத முழுச் சம்பளத் துடன் கூடிய மருத்துவ விடுப்பு போன்ற சலுகைகள் வழங்கப்படாதது குறித்து.

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியத்திலும் பணி புரியும் ஆசிரியர்களுக்கும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் "சரண்டர் லீவ்", 18 மாத முழுச் சம்பளத்துடன் கூடிய